செ.வெ.எண்: 35 நாள்: 15.11.2021

**பத்திரிக்கை செய்தி**

அரசாணை எண்:644, வருவாய் மற்றும் பேரிடர் துறை, நாள்:11.10.2021-ன் படி **“விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் பட்டா தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் கிராம அளவில் சிறப்பு முகாம்கள் நடத்துதல்”** தொடர்பாக 2014 முதல் 2016 வரை தமிழ்நிலம் மென்பொருளில் கிராம கணக்குகள் பதிவேற்றம் செய்த போது ஏற்பட்ட கீழ்க்கண்ட பட்டா பிழை திருத்தங்கள் (கணினி பிழைகள் மட்டுமே) செய்திட கிராமங்கள் தோறும் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

1. உட்பிரிவு எண்--புல எண் தவறாக இருந்தால்
2. பரப்பு திருத்தம்
3. பட்டாதாரர் பெயர் (அ) தந்தை -- பாதுகாவலர் பெயர் திருத்தம்
4. உறவுமுறை திருத்தம்
5. பட்டாவில் உள்ள கலங்கள் காலியாக குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள்
6. பரப்பு--பட்டாதாரர் பெயர் அருகிலுள்ள பரப்பு--பட்டாதாரர் பெயர் மாறி இருப்பது (Interchanged).

எதிர்வரும் வாரத்தில் **17.11.2021** அன்று நாகப்பட்டினம் வட்டத்தில் **எரவாஞ்சேரி, ஆலத்துர், அருண்மொழித்தேவன், கட்டுமாவடி, சீயாத்தமங்கை, துறையூர்** ஆகிய கிராமங்களிலும், கீழ்வேளுர் வட்டத்தில் **வடகரை, கோகூர், ஆந்தக்குடி** ஆகிய கிராமங்களிலும், வேதாரண்யம் வட்டத்தில் **ஆயக்காரன்புலம்-4, ஆயக்காரன்புலம்-3, பன்னாள்** ஆகிய கிராமங்களிலும, திருக்குவளை வட்டத்தில் **வாழக்கரை, மீனம்பநல்லூர்** கிராமத்திலும் நடைபெற உள்ளது.

மேலும் **19.11.2021** அன்று நாகப்பட்டினம் வட்டத்தில் **ஆபரணதாரி, பொன்வெளி, பாப்பாகோவில், கருவேலங்கடை, ஓரத்தூர்** ஆகிய கிராமங்களிலும், கீழவேளுர் வட்டத்தில் **தன்னிலாப்பாடி, வெண்மணச்சேரி** ஆகிய கிராமங்களிலும், வேதாரண்யம் வட்டத்தில் **அண்டகத்துறை, வேதாரண்யபுரம், மூலக்கரை, பிராந்தியக்கரை** ஆகிய கிராமங்களிலும், திருக்குவளை வட்டத்தில் **கூத்தங்குடி,பன்னத்தெரு** கிராமத்திலும் நடைபெற உள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிராம பொது மக்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**